ISSN : **2456-821X** **Vol. 5 Issue 2 Dec 2021**

புதிய அவையம்

# வேள்பாரி நாவலில் போர்க்களக் காட்சி

**ஆய்வாளர்**
*க. சகுந்தலா*
*பகுதிநேர ஆய்வியல் நிறைஞர்*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி,*
*திருவண்ணாமலை – 606603*

**நெறியாளர்**
*முனைவர் ந.குப்புசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.,*
*உதவிப்பேராசிரியர்,*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி,*
*திருவண்ணாமலை - 606603*

*முன்னுரை*

*பறம்பு மலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்பவன் பாரி ஆவான். வேளிர்க்குடியில் பிறந்ததால் வேள்பாரி என்று அழைக்கப்பட்டான். தன்னலமற்ற கொடை உள்ளத்தாலும், அன்பு வழிப்பட்ட வாழ்வியல் மரபாலும் பாரியின் புகழ் தமிழ் நிலமெங்கும் பரவியது. இதனால் சேர, சோழ, பாண்டியர்கள் அவன் புகழ் கண்டு வெதும்பினர். பறம்பு நாட்டின் நிலவளம் அவர்களின் மனஉறுதியை கெடுத்தது. பாரிக்கு எதிராகத் தனித்தனியே அவர்கள் மேற்கொண்ட போர் முயற்சிகள் பற்றியும், மதாங்கர்கள், நாகர்கள், அகுதைகள், மீது எவ்வகையில் போர்த்தொடுத்து தன் வளத்தை காப்பாற்றினான் போன்ற செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.*

*போர் நிகழ்வதற்கான காரணங்கள்*

*பண்டைக் காலத்தில் பசு, மண், கோட்டை, வலிமை என்னும் நான்கினை அடிப்படையாகக் கொண்டு பொதுவாக போர் தொடங்கப்பட்டு வந்தது. ஆரம்பகாலத்தில் மனிதனுக்குத் தேவையான பெருஞ்செல்வமாகக் கால்நடைகளே இருந்தன. எனவே கால்நடைகளை அதிகப்படுத்தவே எல்லோரும் ஆசைப்பட்டனர். அடுத்த இனக்குழுவின் கால்நடைகள் இரவோடு இரவாகக் களவாடப்பட்டன. களவு கொடுத்தவன் ஆயுதங்களோடு அவர்களை தடுத்துநிறுத்தி அக்கால்நடைகளை மீட்டனர். இதனை, ஆநிரைகளைக் கவர்தல் வெட்சி என்றும், அதனைத் தடுத்து நிறுத்துவது கரந்தை என்றும் அழைத்தனர்.*

*"வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்*
*சென்று இகல்முனை ஆதந்தன்று."1*

*என அரசனின் கட்டளையேற்றும், அவனின் குறிப்பறிந்து வீரர்கள் தாமாகவே சென்றும் பகைவரின் ஆநிரைகளை கைப்பற்றினர். இவர்கள் வெட்சிப் பு+வைச் சூடிச்செல்வர். இதேபோல்,*

*"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்*
*ஆதந்து ஓபல் மேவற்று ஆகும்."2*

*அரசனின் கட்டளையேற்று பகைநாட்டு ஆநிரைகளை கைப்பற்றினர் என தொல்காப்பியம் கூறுகிறது. கரந்தைப் பு+வைச் சூடி பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டுச் செல்வது கரந்தை ஆகும்.*

*"மலைத்தெழுந்தார் மறம்சாயத்*
*தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று."3*

*தம்மொடு மாறுபட்டுப் படையாகக் கூடிவந்து பசுக்களை கவர்ந்து சென்றவர் வெட்சி மறவர். அவருடைய வலிமை கெடும்படி போரிட்டு அவர்கள் கைப்பற்றிய பசுக்களை மீட்டனர். வஞ்சிப் பு+வைச் சூடி மாற்றார் மண்ணைக் கவரச் செல்வது வஞ்சி ஆகும். இதனை,*

*"வாடாவஞ்சி தலைமலைந்து*
*கூடர்மண் கொளல்குறித்தன்று."4*

*என ஓர் அரசன் தன்னுடைய பகைவர் நாட்டை கைப்பற்றுவது வஞ்சி ஆகும். இதேபோல்,*

*"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்,*
*அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே."5*

*ஒரு நாட்டின் வேந்தன் பகையரசனின் நாட்டை கைப்பற்றுவதற்காகப் போரிட்டனர் என்று தொல்காப்பியம் கூறுகிறது. தன் நாட்டைக் கவரப் படையெடுத்து வரும் வஞ்சி;யரசனைத் தடுக்க காஞ்சிப் பு+வைச் சூடிப் அதனைத் தடுப்பர்.*

*"வெஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்*
*காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று."6*

*மிகுந்த சினத்தை உடையவன் வஞ்சிப் பு+வைச் சூடிய அரசன் தன் நாட்டைக் கவர வருவதை அறிந்து தன் நாட்டை பாதுகாப்பது காஞ்சி ஆகும். பகைவரால் சூழப்பட்டதால் நொச்சிப் பு+வைச் சூடி தன் மதிலைக் காப்பது நொச்சி ஆகும். இதனை,*

*"ஏப்புழை ஞாயில் ஏத்துநிலை அரணம்*
*காப்போர் சூடிய பு+ப்புகழ்ந் தன்று."7*

*என அம்பினை ஏவுகின்ற அறைகளையும் எய்து மறையும் முடக்குகளையும் உடையது கோட்டை மதிலாகும். ஆதனை நொச்சிப் பு+வைச் சூடிய மறவர் காத்து நின்றனர். பிறரிடமிருந்து கோட்டையைக் காப்பது நொச்சி அக்கோட்டையைக் கவர நினைப்பது உழிஞை ஆகும்.*

*"முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்*
*கொடிநுடங்கு ஆரெயில் கொளக்கரு தின்று."8*

*என பகைவர் நாட்டின் காவற்காட்டையும் அகழியையும் அழித்துக் கோட்டையைக் கைப்பற்றக் கருதுவர். இதேபோல்,*

*"முழுமுதல் அரணம் முற்றிலும் கோடலும்*
*அனைநெறி மரபிற்று ஆகும் என்ப."9*

*அதன் பொருட்டு மறவர் உழிஞைப் பு+வைச் சூடிப் போருக்குச் செல்வர். நேருக்கு நேர் நின்று வலிமையைக் காட்டுவது தும்பை ஆகும்.*

*"செங்களத்து மறம்கருதிப்*
*பைந்தும்பை தலைமலைந்தன்று."10*

*என தும்பைப் பு+வைச் சூடிக் குருதியால் சிவந்த நிறத்தைப் பெற்றிருப்பது போர்களம். அதன்கண் தன்னுடைய வலிமையால் பகைவரை வீழ்த்த நினைப்பர். இவ்வாறு பண்டையக்கால அரசர்கள் போர் புரிவதற்கான காரணங்களாக புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் வகுத்துள்ளது. அதேபோல்,*

*"மைந்துபொருளாக வந்த வேந்தனைச்*
*சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப."11*

*இருநாட்டு வேந்தர்களும் தன் வீரத்தை நிலைநாட்டப் போரிட்டனர் என தொல்காப்பியம் கூறுகிறது.*

*மதங்கர்கள் - சோழர்*

*சித்தாற்றின் வடத்திசையில் வாழும் மக்களை மதங்கர்கள் என அழைத்தனர். வேட்டைச் சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் பிற்காலத்தில் பாணர்களாக மாறினர். யாழ் தெய்வமான மதங்கனையும் மதங்கியையும் வணங்குபவர்கள். இந்தக் குழுவின் தலைவனை மதங்கன் என்றும் தலைவியை மதங்கி என்றும் அழைக்கப்படுவர். தாங்களே வேட்டையாடி அந்த விலங்கில் இருந்து யாழுக்கு நரம்பையும், பறைக்குத் தோலையும் எடுத்து பயன்படுத்துவர். இக்குழுவினரின் அடையாளமே தோல் கருவியான தடாரிதான்.*

தடாரிகளை துணியால் கட்டி கூடையில் வைத்துக் காவடியைப் போல இருபுறமும் தூக்கி வருவார்கள். பயணத்தின் போது அவற்றைக் கீழே இறக்கி மண்ணில் வைக்கமாட்டார்கள். தடாரி மண்ணைத் தொட்டால் அங்கு கூத்து நிகழ்த்திவிட்டுத்தான் அவற்றைத் தூக்கவேண்டும். அதனால் எல்லா நேரங்களிலும் காவடியைப்போலத் தோளிலும் கைக்குழந்தை போல இடுப்பிலும் சுமந்தபடியே இருப்பர். இவர்களின் முன்னோர்கள் யானையின் காலடியின் அளவுகொண்டே தடாரியை வடிவமைப்பர்.

சித்தாற்றங்கரையில் இருந்த நெட்டூர் மலையைச் சோழர்கள் கைப்பற்றி அங்கு வாழ்ந்த மதங்கர்களை கடல் பணிகளுக்கும் ஏவல் வேலைச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அந்தக் குலப்பெண்கள் சோழநாட்டு அரண்மனையில் விறலிகளாக மாறிக்கிடக்கின்றனர். பேரரசை உருவாக்கும் கனவில் எண்ணற்ற இனக்குழுக்கள் அழிந்து போய்விட்டனர்.

*அகுதையர்கள் – பாண்டியர்*

வைகைக்கரை கூடல்நகரை ஆட்சிசெய்தவர்கள் அகுதைக் குடிப்பாணர்கள் ஆவர். வைகைக்கரையில் செழித்து வளர்ந்த வேளாண்மை, அழகிய நாகரிகத்துக்கு அடித்தளம் அமைத்தது. ஆற்றங்கரையின் நிலவளம் கொண்டு பயிர் வளர்க்கவும் விளைவிக்கவும் அறுவடையைச் குவிக்கவும் வேளாண்மையின் ஆதிநுட்பங்களைக் கண்டறிந்து உலகிற்கு சொன்னது அகுதைக் குலமாகும். பறவைகளின் அலகு பறித்துத் தின்னும் காட்டுக் கதிர்களைக் கண்டறிந்தனர். பறவைகளின் கழிவில் இருந்து முளையிடும் தானியங்கள் எவையெவை என அறிந்திருந்தனர். உப்பு விற்கும் உமணர்கள் வணிகத்தின் தொடக்கமான பண்டமாற்று முறையை வைத்திருந்தனர். எல்லோருக்கும் தேவைப்படும் பொருட்கள் அவர்களிடம் இருந்தன. எல்லோரும் தங்களிடம் இருந்தப் பொருட்களை அவர்களிடம் கொடுத்து உப்பைப் பெற்றனர். இந்த நிலமெங்கும் இருக்கும் மனிதக் கூட்டங்கள், அவர்களின் வாழ்விடங்கள், செல்வச் செழிப்பு, சேமிப்பு என எல்லாவற்றையும் அறிந்தவர்கள் உமணர்களே ஆவர்.

போருக்கான காரணம்:
கூடல்நகரில் வளமை கொடிகட்டிப் பறந்தது. விளைச்சல்கள் குவிய தானியக் கதிர்கள் வைக்கும் ஆளுயர மொடாவை உமணர்கள் அங்குதான் முதன்முதலில் கண்டனர். அந்த குலத்தின் செழிப்பு உமணர்களின் கண்களில் அதிசயமென நிலைபெற்றது. அவர்கள் இச்செய்தியை பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த கொற்கைப் பாண்டியனிடம் கூறினர். உமணர்கள் கூறிய தகவலை வைத்தே கொற்கைப் பாண்டியன் தன் வீரர்களோடு புறப்பட வேண்டிய நாளை முடிவுசெய்கிறான்.

போருக்கான உத்தி: வைகையில் புனலாட்டு விழா கூடல்வாசிகள் முழுவதும் நீராடி மகிழ்ந்திருக்கும் நன்னாள். அன்று காலை நமது படை கூடல் நகருக்குள் நுழைந்தால் எளிதில் அதைக் கைப்பற்றலாம் என்று உமணர்கள் நாள் குறித்துச் சொன்னார்கள். அந்நாளின் நண்பகலில் கொற்கைப் பாண்டியனின் படை கடற்கரையிலிருந்து புறப்படுவது அன்றைய போருக்கான உத்தியாக விளங்கியது.

போர்முறை: பொழுது புலர்ந்தது வைகையின் பெருவெள்ளம் தாவிக் குதித்தோடியது. கூடல் மாநகரே நதிக்கரையில் வந்து ஆவலோடு நின்றுகொண்டிருந்தது. குலத்தலைவன் அகுதை யானை மீதேறி வைகைக் கரைக்கு வந்து சேர்ந்தான். எல்லோரும் அவனது கையசைவுக்காகக் காத்திருந்தனர். வைகையை வணங்கி கூட்டத்தை நோக்கிக் கையசைத்தான் அகுதை. புனலாட்டு விழா தொடங்கியது. கரையிலிருந்த ஆண்களும் பெண்;களும் வைகையில் பாய்ந்து உள்ளே இறங்கினர். புனலாட்டு விழா என்பது காதல் திருவிழா. காதலர்கள் நீரால் ஒருவரையொருவர் அடித்து விளையாடுவர். திருமணமானவர்கள் தம் இணையோடு சென்று வைகையில் நீராடி காதல் பேசி விளையாடுவர்.

அகுதை உள்ளிறங்கும் பொழுதுக்காகக் கரையில் நின்றிருந்தவர்கள் காத்திருந்தனர். காதல் ஏறிய கண்கொண்டு தனது மனைவியைப் பார்த்தான் அகுதை. அவளோ அவனது தோள்கவ்வி உள்ளிறங்கும் பொழுதுக்காகக் காத்திருந்தாள். அவன் நீருக்குள் இறங்கியவுடன் அவள் தாவிப்பிடிக்க நினைத்தபோது, அருகில் தோழியிடம் இருந்த அவள் மகன் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தான். குழந்தையைத் தூக்கிக்கொண்டு நதிகரைவிட்டு சற்றே அகன்று உள்காட்டுக்குள் சென்றாள். குழந்தை அழுகை நின்றவுடன் நதியை நோக்கி வரும்போது கொண்டாட்டத்தின் குரல் கேட்கவில்லை. ''நதியின் கரையில் ஏறி நின்று பார்த்தாள். குருதி கரைபுரண்டோட கரையெங்கும் மீன் எழும்புகள்போல் முட்கள் கோக்கப்பட்ட ஈட்டியுடன் உயர்த்திய வாளுடன் எண்ணற்ற வேற்றுக்குலத்தினர் நின்று கொண்டிருந்தனர். அந்த பெண்

*எதிரிகளின் கண்ணில் படாமல் தப்பித்துக் கையில் குழந்தையோடு ஒரு முதுகிழவனை அழைத்துக்கொண்டு பல மாதங்களுக்குப் பிறகு பறம்பு நாட்டிற்குள் வந்தடைந்தாள்."12 அகுதை மாவீரன்தான் ஆனால் திருநாளின் அதிகாலையில் கொலைவாள் கொண்டு சூழப்படுவோம் என்பதை எதிர்பார்க்கும் அளவுக்கு மனம் சீர்படவில்லை. வளமான பு+மி தன் கைக்கு வந்ததும் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் போர்த்தொடுத்தால் வெற்றிப்பெறலாம் என்று அதைவிட பெரும் தாக்குதலை நிகழ்த்தி அடுத்தடுத்து மூன்று குலங்களை அழித்தான்.*

*கோலநாடு – உறையு+ர் கிள்ளி*

*ஆதிகாலத்தில் மலைமக்களில் ஒரு பிரிவினர் கால்நடைகளை வளர்க்கப் பழக்கியபோது மேய்ச்சல் நிலங்களை நோக்கித் தரைக்கு இறங்கினர். குறிஞ்சி நிலத்தைவிட்டு இறங்கிய ஐந்து குடும்பங்கள் செம்மலையின் அடிவாரத்தில் குடில் அமைத்தனர். கால்நடைகளை மேய்த்துப் பல்கிப் பெருக்கினர். ஐந்து வகை குடும்பத்தின் குலவழி தழைத்தது.*

*"அக்குலவழிகளை அடையாளங்கான குலத்துக்கு ஒருவகை சூட்டுக்காயங்களை ஆண்கள் தம் வலது தோளிலே உருவாக்கிக் கொண்டனர். பெண்கள் தங்களின் தலைமுடியைக் குலத்துக்கு ஒருவகையாக பின்னிக்கொண்டனர். ஐவகைக் கொண்டைகளை உருவாக்கினர். உச்சந்தலையில் வகிடு எடுத்து இரு பக்கங்களிலும் இரு கொண்டைகள், மூன்று, நான்கு, ஐந்து விதமான கொண்டைகளை இவர்கள் முடித்தனர்."13 என அறியமுடிகிறது. "மாடு பெய்த நீரின் எல்லா வளைவுகளையும் தனது ஒற்றைக் கோலத்துக்குள் கொண்டுவர அவர்களுக்கு அதிகக் காலம் ஆகவில்லை. செம்மலையின் அடிவாரத்தில் உள்ள பெண்கள் விதவிதமாகக் கொண்டை போட்டுத் தரையெங்கும் கோலம் போடும் அழகரசிகள் என எல்லோராலும் பேசப்பட்டனர். காட்டு வழியிலும் உமணர்களின் காது வழியிலும் இந்தச் செய்தி எல்லாப் பகுதிகளுக்கும் பரவியது. இவர்கள் இருக்கும் பகுதிக்கு 'கோலநாடு' எனப் பெயர் உருவாகியது."14*

*ஐந்து குடும்பங்களும் தங்களின் மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்று பின் ஐந்து தனித்தனிப் பட்டியில்தான் அடைக்க வேண்டும். மாடுகளுக்குப் பிற இடங்களில் சூட்டுக்குறி, காது அறுத்தக் குறிகள் எல்லாம் போட்டிருப்பதைக் கேள்விப்பட்டனர். கால்நடைகளே தங்களின் தெய்வம். எனவே அவற்றைத் துன்புறுத்தாத வழியில் அடையாளமிட விரும்பினர்.*

*செம்மலையில் பல வகையான வண்ணக்கற்கள் கிடக்கின்றன. அவற்றை எடுத்து ஒரு குடும்பத்திற்கு ஒரு வண்ணம் என முடிவுசெய்தனர். அந்த வண்ணக்கல்லையே அக்குல மாடுகளுக்கும் நெற்றிப் பட்டமாகக் கொம்புகளுக்கு இடையில் கயிறு முடித்து நெற்றிப்பட்டத்தை சூட்டினர்.*

*போருக்கான காரணம்: மாடுகளை மேய்ச்சலுக்கு கொண்டுசெல்லும் கோவனின் நடையைத் தொடர்ந்து மொத்த மாடுகளும் நகர்ந்தன. இரவுநேரங்களில் கூத்து நிகழ்த்துவர் எல்லோருக்கும் பாடத்தெரியும். பாடலுக்கு துடிப்பறை முழங்கி இசை கொடுப்பவன் கோவன்தான். வெண்ணெய் விற்றுத் தானியம் பெறுவது பெண்களின் வேலை. இத்தொழிலை நாள்தோறும் செம்பா செய்வாள். இவர்களுக்கு இடையே காதல் மலர்ந்தது. செம்பாவை உறையு+ரைச் சேர்ந்த கிள்ளி காதலித்து வந்தான்.*

*"மாடுகளின் கொம்புகளுக்கு இடையில் கயிறு முறுக்கிக் கட்டப்பட்டிருந்த நெற்றிப்பட்டத்தில் இளஞ்சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, கருஞ்சிவப்பு என ஐந்து வண்ணங்களில் மாணிக்கக்கற்கள். அவர்களின் மலை எங்கும் கிடப்பது மாணிக்கக்கற்கள் நிறைந்துள்ளன. அவற்றை முழுவதும் நாம் அடையவேண்டும் என உறையு+ர் கிள்ளியின் தந்தை கூறினான்."15*

*போருக்கான உத்தி: இருநூறு மாடுகளில் கொள்ளிக் கொம்பு மாடுகள் இருபது இருந்தன. முப்பது விரிகொம்பு மாடுகள், இருபத்தி ஆறு நெற்றியில் மூன்று சுழி உடைய இடிமேலி மாடுகள், மற்றவையெல்லாம் கொம்புகள் உடைய மாடுகள் இவற்றை பயன்படுத்தி திட்டத்தை கோவன் வகுத்தான். மேலும் எரிசாற்று பச்சிலை எடுத்துக்கொண்டு பகைவரை எதிர்நோக்கி காத்திருந்தான். தீப்பந்தங்களோடு பகைவரின் படை கிழக்கிலும் தெற்கிலுமாக சூழ்ந்தது. ஊருக்கு செம்மலைக்கும் இடையில் இருக்கும் இடைவெளிக்கு அந்தப்படை வரும்வரை காத்திருந்தனர்.*

*போர்க்கருவிகள்: கொள்ளிக் கொம்பு மாடுகள், விரிக்கொம்பு மாடுகள், இடிமேலி மாடுகள், எரிச்சாறு பச்சிலை, கிடைநாய்கள், ஈட்டி, வாள் இப்போரில் இருப்படையும் பயன்படுத்தியுள்ளனர்.*

போர்முறைகள்: பகைவர் படைகள் எதிர்ப்பார்த்த இடத்திற்கு வந்ததும் கொம்பின் உச்சிமுனை வாள்போல் நீட்டித்து இருக்கும் கொள்ளிக்கொம்பு மாடுகளை இரு திசைகளுக்கு பத்து மாடுகள் எனப் பிரித்தான் கோவன். அவற்றின் மூக்கில் பச்சிலையை வைத்து நுழைத்து கயிறுகளை உருவிவிட சைகை செய்தான். அம்மாடுகள் பகைவரின் படையை கிழித்துக்கொண்டு சீறிப்பாய்ந்தன. இடது பக்கமும் வலது பக்கமும் இரு கைகளை விரித்தாற்போல கொம்புகள் விரிந்திருக்கும் விரிகொம்பு மாடுகள் முப்பதும் உள்ளிறங்கி பகைவரின் குதிரைகளைத் தாக்கியபடி சென்றது. ஊருக்குள் பட்டியில் அடைத்து வைத்திருந்த கிடைநாய்கள் திறந்துவிட்டனர். பெரும் குரப்பொலியுடன் பகைவரின் குதிரையின் பின்னங்கால் சப்பைகளின் மீது அவை பாய்ந்துக் கொண்டிருந்தன. மலையின் பின்புறம் நின்று கொண்டிருந்த இடிமேலி மாடுகள் இருபத்தியாறையும் மலையுச்சியில் அணிவகுத்து நிறுத்தினான். பெரிய பெரிய வைக்கோற்கட்டுகளை அவற்றின் கொம்புகளில் வைத்து தீவைத்து கழுத்துக் கயிறுகளை உருவிவிட்டான். இதல் உறையு+ர் படை பலர் தப்பிக்க முடியாமல் அழிந்தன. தப்பித்த படை தோற்று ஓடியதை உறுதிப் படுத்தினான். போரில் குடல் சரிந்த குதிரைகளும் உறையு+ர் வீரர்களின் உடல்களும் எங்கும் கிடந்தன. அவற்றிக்கு நடுவில் பெரும்வாள் கொண்டு தலை இருகூறுகளாகப் பிளக்கப்பட்ட விரிகொம்பு மாடு ஒன்று இறந்துகிடந்தது. மாடுகளைப் பு+ச்சிகளும் உண்ணிகளும் கடிப்பதையே பொறுத்துக்கொள்ள முடியாமல் வெண்சாந்து உருண்டை செய்த குலத்தில் பிறந்த நான் எம் மாடுகள் அனைத்தும் அழியப் பச்சிசை எரிச்சாற்றை என் கையாலே தந்துவிட்டேன் எனக் கதறியபடிச் செத்துக்கிடந்த மாட்டின் முன் மண்டியிட்டு உட்கார்ந்தான். அந்த மாட்டின் கொம்புகளை எடுத்து முழு விசையோடு தன் தொண்டைக்குள் இறக்கினான் கோவன். குருதி பொங்கியபோது கண்கள் மங்கின. மூன்று வாரங்களுக்குப் பிறகு பெரும்படையோடு உறையு+ர் தலைவன் செம்மலை அடிவாரம் சென்றன. அப்போது அவர்களை எதிர்த்துப் போரிட அங்கு யாரும் இல்லை. இந்தப் பெரும் பொக்கிச மலை தங்களின் ஆளுமைக்கு வரக்காரணமான மகன் கிள்ளியைக் கொண்டாடினான் சோழன். சில மாதங்களுக்குப்பிறகு கிள்ளி குதிரையில் உறையு+ர் பெருவீதியில் சென்றபோது செம்பா அவனைப் பார்த்து தனியாக இருக்கும் ஒருகுடிலுக்குள் அழைத்துச்சென்றாள். "குடிலின் மேல் செருகியிருந்த இரண்டு கொம்புகளை எடுத்து அவனின் நெஞ்சின் மேல்தோலைக் கீறி ஒற்றை சுழிக்கோலம் உருவாக்கினாள். பின் இடுப்புக்குகீழ் இருசுழிக்கோலம் உருவாக்கினாள்;. பின் உடலெங்கும் வெண்சாந்து உருண்டையை தடவினாள். பின் குடிலைவிட்டு கிள்ளி ஓடினான். அவனை கூர்ந்து கவனித்து காக்கைகள் உடலைகொத்தி தின்றது அவனின் கண்களில் வெண்சாந்து பு+சாததால் அவனின் அழிவை அணுவணுவாக பார்த்துக்கொண்டிருந்தான்."16

நாகக்குடி – பெருஞ்சேரல் தேறிமலையின் அடிவாரத்தில் சேரலர் என்ற ஒரு குலமுண்டு. எருக்குமலையும் தேறிமலையும் ஒரே மலைத்தொடரின் இருவேறு பகுதிகள். எருக்குமலை, தேறிமலையைவிட மிக உயர்ந்து பரந்தது. அந்த மலையின் மீதுதான் நாகர்கள் இருந்தனர். தேறிமலையின் அடிவாரத்தில் சேரலர் இருந்தனர்.

சேரலர் குடி மலையடிவாரத்தில் இருந்ததால் வேளாண்மை, வணிகம் எனத் தங்களின் செயல்களை விரைவாகப் பெருக்கியது. வளமும் கூடியது. பெருஞ்சேரல்தான் அந்தக் குலத்தின் தலைவனாக இருந்தான். நீண்டகாலம் அவனது தலைமையில் சேரலர் குலம் தழைத்தது. அவனுக்கு வயது கூடியது. தோலில் சுருக்கம் படியத் தொடங்கியது. பெருஞ்சேரல் குலத்தின் வளம்பெருக்கித் திறன்கூட்டிய மாவீரன் எனப் புகழப்பட்ட தன்னை வயோதிகம் வந்து பற்றிக்கொண்டதே என வருத்தமடைந்தான். சுருக்கம் களைய வழி உண்டா எனக்கேட்டுத் திசையெங்கும் ஆள் அனுப்பினான். வடதிசை போனவன் சொன்னான் நான் பார்த்த பெருமுனி ஒருவன் இதற்கு வழியுண்டு எனச் சொன்னான். வெகுவிரைவில் அந்த முனி தேறிமலைக்கு அழைத்துவரப்பட்டார். தேகத்தின் சுருக்கம் மரத்தின் சருகைப்போல் உதிரக்கூடியது என்றான். சிறு குண்டம் அமைத்து அதில் பலவிதமான மரக்குச்சிகளைப் போட்டுத் தீமூட்டி அந்தபுகை நடுவே நின்று நாகங்கள் சட்டையைக் கழற்ற ஒரு மூலிகையை உண்ணும் அந்த மூலிகையை உண்டால் உனது தேகத்தின் மேல்தோல் கழன்று அழகுபெறுவாய். அந்த மூலிகையை இந்தப் புவியில் நாகக்குடிகள் மட்டுமே அறிவர் அவர்களை கேட்டு அறிவாய் என்றார். தங்களின் குலத்தலைவனுக்காக மூலிகையைக் கொண்டுவர எவருக்கும் துணிவு இல்லை எனக் கேட்டபோது முதியவர் பொறையன் முன்வந்து திறன்கொண்ட பன்னிரு வீரர்களுடன் தான் போய் வருவதாகக் கூறினார்.

போருக்கான காரணம்: நாகம் என்றுமே மனிதனின் எதிரி;தான். அதனிடம் இரந்து பயன் ஏதுமில்லை. அதை அழித்தால் மட்டுமே மனிதன் பயனடைவான். நாகர்கள் அதனினும் கொடிய அழிவுசக்திகள். அவர்களைக் கூண்டோடு அழித்தாக வேண்டும். அவர்கள் இறங்கி வர முடிவெடுத்தால் ஒரே நாளில் சேரல் குலம் அழிந்துபோகும். நாம் வென்றால் வளமிக்க மலைக்குன்றுகள் நம் நாட்டுடன் இணையும்.

*அதுமட்டுமன்று நாகர்களையே வென்றவர்களாக சேரலர் அறியப்படுவர். அதன் பிறகு யார் மீதும் நாம் போர் தெடுத்தாலும் நமது ஆயுதங்கள் தாக்கும் முன் நாம் வென்ற நாகர்களின் கதைகள் அவர்களை தாக்கி வலுவிழக்கும் என்றான் அரசனின் மகன் பதுமன்.*

*போருக்கான உத்தி: ஆறு மலைகளைத் தாண்டி அவர்களின் இருப்பிடம் உள்ளது. இந்த திசையில் போனால்தான் ஆறுமலைகளைத் தாண்டமுடியும். நாட்டின் வட எல்லையில் கடலோடு இணைந்த மலைமுகடு ஒன்றுள்ளது. அந்தத் திசையில் நுழைந்தால் முதல் குன்றின் மீதுதான் நாகக்குடியின் இருப்பிடம் உள்ளது. நீங்கள் படைகளை அனுப்பினால் நாகர்களை வெற்றிப்பெறலாம்.*
*போர்முறைகள்: வடதிசை மலைமுகட்டின் அடிவாரத்தில் சேரலர் படை அணிவகுத்து நின்றது. தளபதிகள் இரண்டு நிலைகளாகப் படைகளை நிறுத்தியிருந்தனர். காலாட்படையும் விற்படையும் எருக்குமலையை நோக்கி நின்றன. பெருஞ்சேரலின் படை அடிவாரத்தில் திரண்டிருப்பதை அறிந்த நாகர்கள் எதிர் தாக்குதலுக்கு ஆயத்தமானார்கள்.*

*சேரல் வீரர்கள் முன்னோக்கிச் சென்றபோது நாகர்கள் மூன்று அணிகளாக இறங்கி வந்தனர். ஒவ்வொரு அணியிலும் குறைந்த அளவே வீரர்கள் இருந்ததால் பிடாரன் மகிழ்ந்திருந்தான். நாகர்களின் இடதுபுறக் குழு குறுவளைவு கொண்டு இறங்கியது. வலதுபுறக் குழு பெருவளைவு கொண்டு இறங்கியது. நடுவில் வந்த குழு வளைவுகளற்ற நீண்டதாக படுவேகமாக இறங்கியது. நாகர்கள் தனது அம்புகளில் நடுவில் வந்தது சாரைப்பாம்பு உத்தி, இடதுபுறம் வந்தது எரிவிரியன் உத்தி, வலதுபுறம் வந்தது நல்லபாம்பு உத்தி என அறிந்து தனது கூட்டு வண்டியின் மேல் கூடாரத்தில் இருந்த கரும்பருந்துகளும் பாம்புப் பருந்துகளையும் வெளியேற்றினான். அவை சாரைப்பாம்புகளை கவ்விச் சென்றன. பின்பு எண்ணற்ற பாம்புக்கீரிகளும் கருங்கீரிகளும் இருக்கின்றன. அதனுடன் எட்டு பழந்தின்னிக் கீரிகள் இருக்கின்றன. இதன் வாடை காற்றில் பறந்தாலே பாம்புகள் இவ்விடம்விட்டு நீங்கிவீடும் என்று மகிழ்ந்தான். சிறிதுநேரத்தில் பிடாரன் பயந்து ஓடிவந்தான். அவர்கள் பயன்படுத்தியது எள்ளுச்செடியில் உற்பத்தியாகும் கண்ணுக்குத் தெரியாத கொடும் நாகம் குருதிப்பனையன் எனக்கூறியபடி பெருஞ்சேரல்நோக்கி பாய்ந்தான். இந்தக் குன்றில் மட்டும் அவர்களின் குடியிருக்கிறது.. இன்று இரவோடு இரவாகக் குன்றைச் சுற்றிவளையமிட்டுத் தீயிடுங்கள். தீயிலிருந்து மீள அவர்களுக்கு வேறெந்த வழியும் இல்லை நாகர் இனம் முழுமையும் அழியும். பிடாரன் ஒருமுறை தாக்கிவிட்டுப் பாதியில்விட்டால் அவர்கள் உங்களை அழிக்காமல் விட மாட்டார்கள். பின் ஒரு முழம் அளவில் கிளைகளில் வாய் பிளந்து தொங்கியபடி மனிதனைக் கண்டால் தாவிக்கடிக்கும் உச்ச நஞ்சுகொண்ட பச்சிலை விரியன் சிறிதுநேரத்திற்கு முன் பாய்ந்துவந்து பதுமனின் தொண்டையைக் கவ்வியது. அன்றிரவு எருக்குமலைச் சுற்றித் தீ மூட்டப்பட்டது. பிடாரனின் கண்முன் எருக்குமலை முழுவதும் எரிந்தது. அத்தீயில் நாகர்கள் துடிதுடித்துச் செத்தனர். பெருஞ்சேரலின் படை எருக்கு மலையைச் சூழ்ந்து எரியு+ட்டியபோது நாகர்கள் பலரும் போரிட்டு இறந்தனர். மிஞ்சியவர்கள் தீக்களி பு+சி அந்த நெருப்பில் இருந்து வெளியேறி பறம்புமலை வந்து சேர்ந்தனர்.*

*தொகுப்புரை:*

*பண்டைக் காலத்தில் பசு, மண், கோட்டை, வலிமை என்னும் நான்கினை அடிப்படையாகக் கொண்டு பொதுவாக போர் தொடங்கப்பட்டு வந்தது. ஆரம்பகாலத்தில் மனிதனுக்குத் தேவையான பெருஞ்செல்வமாகக் கால்நடைகளே இருந்தன. எனவே கால்நடைகளை அதிகப்படுத்தவே எல்லோரும் ஆசைப்பட்டனர். அடுத்த இனக்குழுவின் கால்நடைகள் இரவோடு இரவாகக் களவாடப்பட்டன. களவு கொடுத்தவன் ஆயுதங்களோடு அவர்களை தடுத்துநிறுத்தி அக்கால்நடைகளை மீட்டனர் என்ற பழந்தமிழரின் போர் முறைகள் வேள்பாரி நாவலில் வெளிப்படுவதை காணலாம்.*

*சித்தாற்றின் வடத்திசையில் வாழும் மக்களை மதங்கர்கள் என அழைத்தனர். வேட்டைச் சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் பிற்காலத்தில் பாணர்களாக மாறினர். யாழ் தெய்வமான மதங்கனையும் மதங்கியையும் வணங்குபவர்கள். இந்தக் குழுவின் தலைவனை மதங்கன் என்றும் தலைவியை மதங்கி என்றும் அழைக்கப்படுவர். தாங்களே வேடடையாடி அந்த விலங்கில் இருந்து யாழுக்கு நரம்பையும், பறைக்கு தோலையும் எடுத்து பயன்படுத்துவர் என்ற செய்திகள் இனக்குழச் சமூகத்தை அறிந்துகொள்ளும் வகையில் நாவிலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***வைகைக்கரை கூடல்நகரை ஆட்சிசெய்தவர்கள் அகுதைக் குடிப்பாணர்கள் ஆவர். வைகைக்கரையில் செழித்து வளர்ந்த வேளாண்மை, அழகிய நாகரிகத்துக்கு அடித்தளம் அமைத்தது. ஆற்றங்கரையின் நிலவளம் கொண்டு பயிர் வளர்க்கவும் விளைவிக்கவும் அறுவடையைச் குவிக்கவும் வேளாண்மையின் ஆதிநுட்பங்களைக் கண்டறிந்து உலகிற்கு சொன்னது அகுதைக் குலமாகும். புறவைகளின் அலகு பறித்துத் தின்னும் காட்டுக் கதிர்களைக் கண்டறிந்தனர். பறவைகளின் கழிவில் இருந்து முளையிடும் தானியங்கள் எவையெவை என அறிந்திருந்தனர் என்ற பழந்தமிழரின் வேளாண்மை சார்ந்த அறிவு இந்நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.***

***அடிக்குறிப்புகள்***

*1.* ***புறப்பொருள் வெண்பாமாலை.,.ப.****14*
*2.* ***தொல்.,பொருள்.,இளம்.உரை.,நூ.****60.,****ப.****73*
*3.* ***புறப்பொருள் வெண்பாமாலை.,ப.****35.*
*4.* ***மேலது.,ப.****51*
*5.* ***தொல்.,பொருள்.,இளம்.உரை.,நூ.****64.,****ப.****86*
*6.* ***புறப்பொருள் வெண்பாமாலை.,ப.****78.*
*7.* ***மேலது.,ப.****105*
*8.* ***மேலது.,ப.****115*
*9.* ***தொல்.,பொருள்.,இளம்.உரை.,நூ.****66.,****ப.****93*
*10.* ***புறப்பொருள் வெண்பாமாலை.,ப.****147*
*11.* ***தொல்.,பொருள்.,இளம்.உரை.,நூ.****70.,****ப.****101*
*12.* ***புறப்பொருள் வெண்பாமாலை.,ப.****151*

*13.* ***மேலது.,ப.****166*

*14.* ***மேலது.,ப.****166*

*15.* ***மேலது.,ப.****175*

*16.* ***மேலது.,ப.****187*